**நீலகிரி மாவட்டம், உதகை நகராட்சிக்குட்பட்ட தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் இன்று (08.07.2020) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

((()))

நீலகிரி மாவட்டம் உதகை நகராட்சிக்குட்பட்ட ரோஜா பூங்கா, லவ்டேல், புதுமந்து சாலை, மருத்துவமனை சாலை, பெர்ன்ஹில், நஞ்சநாடு ஊராட்சிக்குட்பட்ட மேல்கவ்ஹட்டி ஆகிய தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசெண்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் இன்று (08.07.2020) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு கூறியதாவது,

"தமிழ்நாடு அரசு கொரோனா வைரஸ் பாதிப்பிலிருந்து மக்களை காக்கும் வகையில் பல்வேறு சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, நீலகிரி மாவட்டத்தில் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் பொதுமக்களுக்கு தேவையான நிவாரணப் பொருட்கள் உடனுக்குடன் வழங்கப்பட்டு வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் தற்பொழுது வரை 150 நபர்களுக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்களில் 49 நபர்கள் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். மீதமுள்ள 101 நபர்களின் 74 நபர்கள் உதகை அரசு மருத்துவமனையிலும், 07 நபர்கள் குன்னூர் அரசு மருத்துவமனையிலும், 20 நபர்கள் கோவை இ.எஸ்.ஐ மருத்துவமனையிலும் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நீலகிரி மாவட்டத்தில் தற்பொழுதுவரை 45 தனிமைப்படுத்தப்பட்ட இடங்களாக உள்ளன. அவ்விடங்களை சுகாதாரத்துறை, உள்ளாட்சித்துறை மற்றும் பல்வேறு துறைகள் இணைந்து வீடு வீடாக சென்று கண்காணித்து வருகின்றனர். வெளியாட்கள் இந்த தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் செல்லாதவாறு காவல்துறையின் மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது. அனைத்து நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் ஒலிப்பெருக்கி மூலம் பொதுமக்கள் முறையான முகக்கவசம் அணிவது, சமூக இடைவெளியை பின்பற்றுவது போன்றவற்றை வலியுறுத்தி, விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. பொதுமக்கள் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் உள்ள குடியிருப்புகளுக்கு 250 கிராம் பிளீச்சிங் பவுடர், பொதுமக்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் பொருட்டு அவர்களுக்கு வைட்டமின்-சி, ஜிங்க் மாத்திரைகள், கபசுரக்குடிநீர், ஆர்சானிக் ஆல்பம்-30 போன்றவைகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. அதில் தொற்று பாதிப்பு அதிகமுள்ள இடங்களான கேத்தி பேரூராட்சி, குன்னூர் மற்றும் உதகை நகராட்சி பகுதிகளில் வசிக்கும் அனைத்து பொதுமக்களுக்கும் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் பொருட்டு அவர்களுக்கு வைட்டமின்-சி, ஜிங்க் மாத்திரைகள், கபசுரக்குடிநீர், ஆர்சானிக் ஆல்பம்-30 போன்றவைகள் தொடர்ந்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களுக்கு உதவும் வகையில் தன்னார்வலர்களை கொண்டு பொதுமக்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்கள் நியாய விலைக்கடைகள் மூலம் வீட்டிற்கே வழங்கப்படும். காய்கறிகள் மற்றும் மளிகைப் பொருட்கள் வீடு வீடாக வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. தொற்று அதிகமுள்ள பகுதிகளில் சுகாதாரத்துறை வாகனங்களின் மூலம் பொதுமக்களுக்கு சளி, காய்ச்சல், இருமல் போன்ற அறிகுறிகள் தென்பட்டால் அவர்களுக்கு பரிசோதனை மேற்கொள்ளப்படும்.

பொதுமக்கள் அத்தியாவசியத் தேவைகளுக்கு வீட்டை விட்டு வெளியே வரும்பொழுது கட்டாயம் முகச்கவசம் அணிந்து வர வேண்டும். முகக்கவசம் அணியாமல் வருபவர்களுக்கு பறக்கும் படை மற்றும் வருவாய்த்துறை ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் மூலம் ரூ.50/- அபராதம் விதிக்கப்படும். எனவே பொதுமக்கள் தேவையில்லாத காரணங்களுக்காக வீட்டை விட்டு வெளியே வராமல் தங்களை பாதுகாத்துக் கொள்ளுமாறும், வெளியூர் சென்று வந்தவர்களுக்கு அதிகளவில் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதால், பொதுமக்கள் முக்கியமான மருத்துவ தேவைகளை தவிர்த்து, குடும்ப விழாக்களுக்கு செல்வதை தவிர்க்குமாறும், அரசு தெரிவிக்கும் வழிமுறைகளை மக்கள் உணர்ந்து நடந்தால் மட்டுமே நீலகிரி மாவட்டத்தை கொரோனா தொற்றில்லா மாவட்டமாக மாற்ற முடியும். மேலும் வெளியிடங்களிலிருந்து தங்கள் பகுதிகளுக்கு வெளியாட்கள் வருகை புரிந்தால்

உடனடியாக 24 மணி நேரமும் செயல்படும் 1077 என்ற மாவட்ட கட்டுப்பாட்டு மைய எண்ணிற்கு தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கலாம்.

நீலகிரி மாவட்டத்திற்குள் வெளி மாவட்டங்களிலிருந்து இ-பாஸ் பெற்று வருகைப் புரிபவர்கள் கட்டாயம் வீடுகளில் சுய தனிமையில் இருக்க வேண்டும். வெளிமாநிலங்களிலிருந்தும் இ-பாஸ் பெற்று வருபவர்கள் பரிசோதனை முடிவு வரும் வரையில் மருத்துவமனைகளில் தனிமைப்படுத்தப்படுவார்கள். தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளிலிருந்து பொதுமக்கள் எக்காரணத்தைக் கொண்டும் வெளியிடங்களுக்கு வராமல் இருக்க வேண்டும். உத்தரவை மீறி தனிமைப்படுத்தப்பட்ட பகுதியிலிருந்து பொதுமக்கள் வெளியே நடமாடினால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்” இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) மரு.பாலுசாமி, உதகை ஊராட்சி ஒன்றிய குழத்தலைவர் திரு.மாயன் (எ) மாதன், உதகை வருவாய் கோட்டாட்சியர் மரு.சுரேஷ், உதகை நகராட்சி ஆணையாளர் திருமதி.சரஸ்வதி, வட்டார மருத்துவ அலுவலர் திரு.முருகேசன், உதகை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.ரமேஷ்கிருஷ்ணன், திரு.சந்திரசேகர், உதகை வட்டாட்சியர் திரு.குப்புராஜ், மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் உட்பட உடனிருந்தனர்.

*வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்.*